பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 05 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவில் எளிதாக வணிகம் செய்யவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதிலும் மத்திய அரசு தொடர்ந்து உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. 2047ஆம் ஆண்டிற்குள் 'போதைப்பொருள் இல்லாத இந்தியா' என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. ஏற்றுமதி செய்யப்படும் பெட்ரோல் மீது லிட்டருக்கு மூன்று ரூபாய் சிறப்பு கூடுதல் கலால் வரியை மத்திய அரசு விதித்துள்ளது.

4. பெட்ரோல், டீசல் விலை உயர்வை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவில் எளிதாக வணிகம் செய்யவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை எளிமைபடுத்துவதிலும் மத்திய அரசு தொடர்ந்து உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்களுக்கான செஸ் வரி அல்லது கூடுதல் கட்டணம் விதிக்கப்படவுள்ளதாக ஊடக நிறுவனம் ஒன்று வெளியிட்ட அறிக்கையை பிரதமர் திரு. மோடி தனது சமூகவலைதளப் பதிவில் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

அந்த அறிக்கை முற்றிலும் பொய்யானது என்றும், அதில் ஒரு துளிகூட உண்மையில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்களுக்கு இது போன்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஐந்து நாடுகள் அரசுமுறைப் பயணத்தின் இரண்டாம் கட்டமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று நள்ளிரவு நெதர்லாந்து சென்றடைந்தார்.

ஆம்ஸ்டர்டாம் விமான நிலையம் வந்தடைந்த பிரதமர் திரு. மோடியை, நெதர்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. டாம் பெரண்ட்சன் வரவேற்றார்.

தி ஹேக் நகரில் உள்ள ஹோட்டலில், பிரதமருக்கு அங்குள்ள இந்திய வம்சாவளியினர் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகளுடன் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்தப் பயணத்தின் போது, நெதர்லாந்து பிரதமர் திரு. ராப் ஜெட்டனுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

மேலும், அந்நாட்டு மன்னர் மற்றும் அரசியையும் அவர் சந்தித்துப் பேசுகிறார்.

அண்மையில் கையெழுத்திடப்பட்ட இந்தியா - ஐரோப்பா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் இந்தப் பயணம், இருதரப்பு உறவுகளைத் தாண்டி, இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான பரந்த உறவுகளை வடிவமைப்பதில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பிரதமர் திரு. மோடி இன்று இந்திய வம்சாவளியினர் இடையே உரையாற்றவுள்ளதுடன், நெதர்லாந்தின் முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளையும் சந்திக்கிறார்.

செமிகண்டெக்டர் சிப்புகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய துறைகளில் பல முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

2047ஆம் ஆண்டிற்குள் 'போதைப்பொருள் இல்லாத இந்தியா' என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுடெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், போதைப்பொருள் கடத்தல் குழுக்களை முறியடிப்பதற்கான விரிவான திட்டத்தை இந்திய பாதுகாப்பு படைகள் தயாரித்துள்ளதாக கூறினார்.

இந்த இலக்கை நோக்கி அவை தீவிரமாகச் முன்னேறி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் என்பது வெறும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை மட்டுமல்ல, அது சமூகம் மற்றும் எதிர்கால சந்ததியினர் மீது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்று என்பதால், இதற்கு விரிவான கூட்டு நடவடிக்கை தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் எல்லையை ஒரு பாதையாகப் பயன்படுத்தி ஒரு கிராம் போதைப்பொருள் கூட நாட்டிற்குள் நுழைவதற்கோ அல்லது வெளியறுவதற்கோ அனுமதிக்கப்படாது என்று திரு. அமித் ஷா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பெட்ரோல் மீது லிட்டருக்கு மூன்று ரூபாய் சிறப்பு கூடுதல் கலால் வரியை மத்திய அரசு விதித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பில், டீசல் ஏற்றுமதிக்கான சிறப்பு கூடுதல் கலால் வரி, 23 ரூபாயிலிருந்து 16 ரூபாய் 50 பைசாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான எரிபொருள் மீதான சிறப்பு கூடுதல் கலால் வரியும் லிட்டருக்கு 33 ரூபாயிலிருந்து 16 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றியமைக்கப்பட்ட புதிய வரி விகிதங்கள், இன்று முதல் அடுத்த 15 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

அதேநேரத்தில், உள்நாட்டுப் பயன்பாட்டிற்கான பெட்ரோல் மற்றும் டீசல் மீதான தற்போதைய கலால் வரி விகிதங்களில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

பெட்ரோல், டீசல் விலை உயர்வை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. விஜய் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விலை உயர்வு காரணமாக ஏழை, நடுத்தர மக்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பெட்ரோல், டீசல் மீதான விலை உயர்வு ஏழை, எளிய, நடுத்தர மக்களை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கும் என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டு மக்கள் மீதான இந்த சுமையை மத்திய அரசு உடனே குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் **CBSE, 12**ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளுக்குப் பிந்தைய மறுஆய்வு  குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

நியாயமான மற்றும் வெளிப்படையான மதிப்பீட்டு முறையை உறுதி செய்யும் நோக்கில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தங்களது தேர்வு முடிவுகளில் திருப்தி இல்லாத மாணவர்கள், இரண்டு கட்ட மறுஆய்வு முறையைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று வாரியம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக, மாணவர்கள் தங்களது விடைத்தாள்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை இணையவழியில் விண்ணப்பித்துப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இரண்டாம் கட்டமாக, விடைத்தாள்களில் உள்ள குறைபாடுகளை சரிபார்க்கவோ அல்லது மதிப்பெண் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட பதில்களை மறுமதிப்பீடு செய்யவோ மாணவர்கள் கோரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடைத்தாள்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளைப் பெறுவதற்கு, வரும் **19**ஆம் தேதி முதல் **22**ஆம் தேதி வரை இணையவழியில் விண்ணப்பிக்கலாம் என்றும், இதற்கு ஒரு பாடத்திற்கு **700** ரூபாய் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் சிபிஎஸ்இ தெரிவித்துள்ளது.

மேலும், மதிப்பெண் சரிபார்ப்பு மற்றும் மறுமதிப்பீட்டிற்கு, வரும் **26**ஆம் தேதி முதல் **29**ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி, காரணமாக, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, தேனி ஆகிய **4** மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இன்று இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தென் தமிழகம் மற்றும் கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஹோர்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

------------

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இரண்டு பாலங்கள் இடிந்து விழுந்ததில் 4 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

------------

தெலங்கானாவின் நம்பள்ளி ரயில் நிலையத்தில் ஜெய்ப்பூர் விரைவு ரயிலின் குளிர்சாதன பெட்டியில் நேற்றிரவு தீ விபத்து ஏற்பட்டது.

------------

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது தொடர்பாக புனேயை சேர்ந்த பேராசிரியர் ஒருவரை சிபிஐ கைது செய்துள்ளது.

------------

கிரேட்டர் நொய்டா அருகே மிகப்பெரிய மரச்சாமான் சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 கடைகள் எரிந்து நாசமானது.

------------

மத்திய அரசின் இந்துஸ்தான் காப்பர் நிறுவனம் கடந்த நிதியாண்டில் ஆயிரத்து 232 கோடி ரூபாய் லாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

------------

பயணிகளின் வசதிக்காக விசாகப்பட்டினத்தில் இருந்து பெங்களூருவிற்கு சென்னை வழியாக இம்மாதம் 22, 29 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளது.

------------

கோவையில் தலைக்கவசம் விற்பனை செய்யும் கடைகளில் இந்திய தர நிர்ணய அதிகாரிகள் சோதனை நடத்தி தரமற்ற தலைக்கவசங்களைப் பறிமுதல் செய்தனர்.

------------

தேனி வீரபாண்டி கௌரியம்மன் கோவில் சித்திரைத் திருவிழா தேரோட்டத்தை மாவட்ட ஆட்சியர் திரு. ரஞ்சித் சிங் நேற்று தொடங்கி வைத்தார்.

------------

ஆவடியில் உள்ள போர் வாகனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 52வது நிறுவன தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

------------

சென்னையில் சட்டவிரோதமாக மதுக்கூடங்களை நடத்தியதாக 16 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் லக்னோ அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

லக்னோவில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 187 ரன் எடுத்தது.

188 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய லக்னோ அணி 16 புள்ளி 4 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 188 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

கொல்கத்தாவில் இன்றிரவு மணி 7.30க்கு நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

------------

ஐ.எஸ்.எல் கால்பந்து போட்டியில் மும்பை அணி **4-0** என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.

இன்று மாலை **5** மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இரவு **7.30** மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் ஒடிசா அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**